செ.வெ.எண்: 249 நாள்: 19.05.2021

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் அறந்தாங்கி அரசு மருத்துவமனையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (19.05.2021) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

பின்னர் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் 70 படுக்கைகள் கொண்ட கோவிட் சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருகிறது. இதில் 66 கோவிட் நோயாளிகள் தற்பொழுது சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நோயாளிகளில் சிலரிடம் இன்று உரையாடிய போது இம்மையத்தில் சிறந்த முறையில் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் தரமான உணவு வழங்கப்படுவதாக தெரிவித்தனர். இதனால் நல்ல முறையில் குணமடைந்து வருவதாகவும் தெரிவித்தனர். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க கோவிட் நோயாளிகளுக்கான மருத்துவம், சத்தான உணவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவை தமிழக அரசின் சார்பில் சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

கோவிட் முதல் அலையை விட இரண்டாம் அலை வேகமாக பரவி வருகிறது. இதனால் அதிகமானோர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு நடவடிக்கையால் கோவிட் நோய் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு வருவதுடன்,

மூன்றாவது கோவிட் அலை வந்தாலும் அதனையும் சமாளிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களுக்கு தேவையான அளவு ஆக்ஸிஜன் கையிருப்பில் உள்ளது. திரவ ஆக்ஸிஜன் ஒவ்வொரு நாளும் பெறப்பட்டு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே ஆக்ஸிஜன் தட்டுப்பாடு என்ற தவறான தகவலை யாரும் பரப்ப வேண்டும். மேலும் பொதுமக்கள் இதுகுறித்து அச்சப்பட தேவையில்லை. அரசு மேற்கொண்டு வரும் சிறப்பான நடவடிக்கையால் ஏராளமான கோவிட் நோயாளிகள் குணமடைந்து, அவர்களது உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

கோவிட் நோய் தொற்றிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அனைவரும் கட்டாயம் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு கோவிட் தடுப்பூசி போடப்பட்டு வருவதுடன், தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கோவிட் தொற்றை கண்டறியும் வகையில் அதிக அளவில் ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பொதுமக்கள் இப்பரிசோதனை மேற்கொண்டு கொரோனா தொற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உடனடி சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு வர வேண்டும். ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைக்கு வருவதால் கோவிட் நோய் தொற்றை எளிதாக குணப்படுத்த முடியும்.

அறந்தாங்கி அரசு மருத்துவமனையினை தலைமை மருத்துவமனையாக உயர்த்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அனைத்து நாட்களிலும் நோயாளிகளுக்கு சிடி ஸ்கேன் தொடர்ந்து எடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் அறந்தாங்கி அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கோவிட் கவனிப்பு மையத்தினையும், அதனை தொடர்ந்து பொன்னமராவதி, வளையப்பட்டி அரசு மருத்துவமனையினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது அறந்தாங்கி சார் ஆட்சியர் ஆனந்த் மோகன் இ.ஆ.ப., உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**